Dt.: Crl. Misc. Petition

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

**C. C.No. 204/ 2016**

DEPOSITION OF WITNESS : P.W. 1

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகன் | Father's Name/ Husband Name | : செல்லமுத்து |
| Village | கோட்டைபட்டி | Taluk | : |
| Religion | : | Age | : |
| Calling | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.09.2023

(3ம் எதிரி ஆஜர் .1,2 எதிரிகள் ஆஜரில்லை கு .வி.மு.ச பிரிவு 317ன் படி மனு அனுமதிக்கப்பட்டது )

முதல் விசாரணை

மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன் . நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும் . 22.05.2016ம் தேதி காலை 07.00 மணியளவில் நான் குத்தகைக்கு வாங்கிய இடத்தில் வெங்காயத்திற்கு மருந்து அடித்துகொண்டிருந்தபோது, பாண்டியராஜன், செல்வம், ராமு ஆகிய மூவரும் வந்து என்னை பார்த்து ஏன்டா தேவிடியா மகனே பிரட்சனை இருக்கிற போது நீ வந்து விவசாயம் செய்பவனா என்று கூறி , எதிரிகள் அனைவரும் மோட்டார் ரூம்மிற்கு முன்னால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த 2 இருசக்கர வாகனங்களை வெட்டருவாள் மற்றும் மண்வெட்டிகளை வைத்து சேதப்படுத்தினார்கள். ஒரு வண்டியில் பெட்ரோலை ஊற்றி தீ வைத்துவிட்டார்கள் . எதிரிகள் அனைவரும் என்னை பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என மிரட்டிவிட்டு அவர்களது தோட்டத்திற்கு சென்றுவிட்டாகள்.பிறகு நான் கண்டமனூர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். **நான் கொடுத்த புகார் அசாஆ 1. சேதப்படுத்தப்பட்ட இருசக்கரவாகனத்தின் புகைப்படம் அசாஆ 2. எரிக்கப்பட்ட இருசக்கரவாகனத்தின்**

**புகைப்படம் அசாஆ 3.** ( எதிரிகள் தரப்பில் இரண்டு புகைப்படங்களுக்கும் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

தீயால் எரிக்கப்பட்ட ஒரு வண்டி என்னுடையது என்றால் சரிதான் . அந்த வண்டியின் RC Book கொடுத்துள்ளேன். இந்த வண்டியின் சேதமதிப்பு புகாரில் குறிப்பிட்டுச்சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . நான் சீனிவாசன் மனைவி நிறைமதியின் நிலத்தை நான் குத்தகைக்கு எடுத்துள்ளேன் . இராமகிருஷ்ணாபுரத்தை சேர்ந்த சீனிவாசன் மற்றும் அவரது மனைவி நிறைமதிக்கும் எனக்கும் குத்தகை ஒப்பத்தம் போட்டுள்ளேன் என்றால் சரிதான் . அழகுராஜா என்னுடைய ஊர்க்காரர் தோட்டத்திற்கு மருந்துஅடிக்க வந்தார் என்று புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். காசிமணி என்பவர் என்னுடைய தோட்டத்திற்கு தண்ணீர்பாய்ச்ச வந்தார் என்று புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் . குத்தகை எடுத்த தோட்டத்திற்கு பக்கத்தில் எனக்கு எந்த தோட்டமும் இல்லை என்றால் சரிதான். பாண்டியராஜனுக்கும் எனக்கும் நிலப்பிரட்சனை உள்ளது என்றால் சரிதான். தீ வைத்து எறிக்கப்பட்ட வாகனம் முழுவதும் சேதமாகிவிட்டது என்றால் சரிதான். செல்வத்திற்கும் எனக்கும் எந்தவித பிரட்சனையும் இல்லை என்றால் சரிதான் . காவல்நிலைய புகாரில் போலீசார் அப்போதே விசாரித்து என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சரிதான். போலீசார் என்னிடம் 1 முறை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் . எதிரிகள் இருசக்கரவாகனத்தை அடித்து நொறுக்கி சேதப்படுத்தியதை பார்த்தேன் என்று முதல்தகவல் அறிக்கையிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . சேதப்படுத்தப்பட்ட இரு வாகனங்களையும் காவல்நிலையத்திற்கு கொண்டுவந்தார்கள் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்தபின்பு ஒரு வாகனத்தை தான் எடுத்துச்சென்றார்கள் . தீ வைத்த வண்டியை காவல்நிலையத்தில் கொண்டுவரவில்லை என்றாலும் சரிதான் . சம்பவத்தன்று நான் , அழகுராஜா, காசிமணி ஆகியோர் வேலைபார்த்துகொண்டிருந்தோம் . பாண்டியராஜ் என்பவர் வண்டியை கீழே தள்ளிவிட்டார் என்றும் , ராமு வெட்டருவாள் வைத்தார் என்றும் புகாரில் கூறியுள்ளேன் . அழகுராஜா, காசிமணி ஆகியோர்களை போலீசார் விசாரித்தனர். நான் கூறிய வாக்குமூலத்தை போலவே அசா 2, அசா3 ம் கூறியுள்ளனர். நீதிமன்றம் மூலம் எறிந்த வாகனத்தை நான் வாங்கவில்லை என்றால் சரிதான். சம்பவம்

ஏதும் நடைபெறவில்லை என்றாலும், வேறுஒருபகையை மனதில் வைத்துக்கொண்டு பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . எதிரிகள் வைத்திருந்த அருவாள், கம்பு புதருக்குள் எறிந்து விட்டு சென்றுவிட்டார்கள் . அந்த ஆயுதங்களை போலீசார் கைப்பற்றினாரா இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

Dt.: Crl. Misc. Petition

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

**C. C.No. 204/ 2016**

DEPOSITION OF WITNESS : P.W. 2

| | | | |
|---|---|---|---|
| Name | : காசிமணி | Father's Name/ Husband Name | : குழந்தைவேலு |
| Village | கோட்டைபட்டி | Taluk | : |
| Religion | : | Age | : |
| Calling | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.09.2023

(3ம் எதிரி ஆஜர் .1,2 எதிரிகள் ஆஜரில்லை கு .வி.மு.ச பிரிவு 317ன் படி மனு அனுமதிக்கப்பட்டது )

முதல் விசாரணை

மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன் . நான் கூலி வேலை செய்து வருகிறேன். அசா1 எனக்கு தெரியும் . எதிரிகளை எனக்கு தெரியும் . கடந்த 8 வருடத்திற்கு முன்பு முருகன் என்னை அவரது தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக அழைத்துச்சென்றார். நான் மக்காச்சோளத்திற்கு தண்ணீர் பாய்ச்சுக்கொண்டிருந்தேன். மோட்டார் ரூம்மின் முன்பு 2 இருசக்கரவாகனம் நின்றுகொண்டிருந்தது. அப்போது காலை 07.00 மணியளவில் எதிரிகள் அனைவரும் அங்குவந்து முருகனிடம் இருந்த முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு இருசக்கரவாகனங்களை அருவாள் , மண்வெட்டியால் அடித்து நொறுக்கினார்கள் . சத்தம்கேட்டு நான் வந்தபோது இருசக்கரவாகனத்திற்கு தீ வைத்துவிட்டு சென்றுவிட்டார்கள். முருகன் மருந்து அடித்துக்கொண்டிருந்தார் . அதன்பிறகு முருகன் வந்துகொண்டிருந்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்று சொன்னால் சரிதான். சம்பவத்தன்றே வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சரிதான் . எதிரிகள் தோட்டத்திற்கு வரும்போது நான் பார்க்கவில்லை அடித்து சத்தம் கேட்டபின் தான் சென்று பார்த்தேன் . சம்பவ இடத்தில் நான் இல்லை என்றாலும் அசா 1ன் வேண்டுகோளின் படிபொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல . சம்பவ இடத்தில் அசா 1ற்கு தோட்டம் கிடையாது . பாலகிருஷ்ணாபுரத்தை சேர்ந்த சீனிவாசன் என்பவரின் மனைவியிடம் ஒத்திக்கு வாங்கியிருந்தார் . எதிரியின் பெயர் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

Dt.: Crl. Misc. Petition

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

**C. C.No. 204/ 2016**

DEPOSITION OF WITNESS : P.W. 3

| | | | |
|---|---|---|---|
| Name | : சுப்புராஜ் | Father's Name/ Husband Name | : பொன்னுகாளை |
| Village | பள்ளப்பட்டி | Taluk | : |
| Religion | : | Age | : |
| Calling | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.09.2023

(3ம் எதிரி ஆஜர் .1,2 எதிரிகள் ஆஜரில்லை கு .வி.மு.ச பிரிவு 317ன் படி மனு அனுமதிக்கப்பட்டது )

<u>முதல் விசாரணை</u>

மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அசா1 எனக்கு தெரியும். எதிரிகளை எனக்கு தெரியும். 22.05.2016 அன்று காலை 07.00 மணியளவில் நான் எனது தோட்டத்தில் தண்ணீர்பாய்ச்சுக்கொண்டிருந்தேன். பக்கத்து தோட்டத்தில் இருந்த முருகன் என்பவரின் கிணற்று அருகே தீ எறிந்தது தெரிந்ததால் நான் முருகனுக்கு போன்மூலம் தோட்டத்தில் ஏன் தீ எறிகிறது என்று கேட்டேன் . அதற்கு அசா1 என்னிடம் எதிரிகள் என்னை அசிங்கமாக பேசி இருசக்கரவாகனத்தில் தீ வைத்து விட்டதாக கூறினார் . போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை என்று சொன்னால் சரிதான்.